# நளவெண்பா புராணத்தில் சுயம்வரக்குறிப்புகள்

ச. சுமித்ரா
இளங்கலைத்தமிழ்
காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி

35

ஆய்வுச் சுருக்கம்:-

வடநாட்டின் வேந்தனான நளனின் வரலாற்றைக் கூறும் நூல் நளவெண்பா ஆகும். நளவெண்பாவை இயற்றிய புகழேந்திப் புலவர் - தமயந்தியின் சுயம்வர காண்டத்தின் காட்சியை விவரிக்கிறார். சுயம்வர நிகழ்வில் பெண்மையின் அறிவு, திறம் நிகழ்வில் கலந்து கொண்ட அறிஞர்கள்இ வேந்தர்கள், வள்ளல்கள் ஆகியோரின் சிறப்பும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது பற்றியக் கருத்துக்கள் இந்த ஆய்வுக் கட்டுரையில் அமைந்துள்ளது.

முன்னுரை:-

நளவெண்பா புராணத்தில் அறம், மறம், மானம, நன்றியறிதல் அன்பு, அருள், ஆக்கம், காதல், கற்பு முதலிய வாழ்வியலுக்குத் தேவையான அறம் நிறைந்துள்ளது. தமயந்தியின் சுயம்வர நிகழ்வில் கலந்து கொண்ட வேந்தர்கள, வள்ளல்கள் ஆகியோரின் வரலாறும் வாழ்வியல் நிகழ்வுகளும் அமைந்துள்ளன.

சுயம்வரம்:-

பெண்களுக்குத் தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டு;ள்ளதை அறியும் முகமாகப் பண்டு தமிழ்ச் சமூகத்தில் காணப்பட்ட வேந்தர்கள் தங்கள் மகளுக்குத் தக்க மணமகனைச் சுயம்வரம் மூலம் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இந்த சுயம்வர முறை இளவரசிகள் தங்களுக்கு விருப்பமான வேந்தர்களைத் தேர்வு செய்து கொள்ள பயன்படுத்திய ஒரு முறையாகப் பல பழங்கதைகள் கூறுகின்றன. இக்கதைகளிலுள்ளபடி சுயம்வர நிகழ்வின் போது இளவரசியின் தோழியானவள் சுயம்வரத்திற்கு வந்துள்ள வேந்தர்களின் வீரச்செயல்கள் பண்பு குலப்பெருமை மாண்பு முதலிய குணங்களை ஒவ்வொன்றாக எடுத்துரைப்பாள். இவைகளில் மணமகளினைக் கவரும் ஒருவனுக்கு அவள் மாலையிட்டு மணமகனைத் தேர்வு செய்வார்.

பழங்கதைகளான மகாபாரதம இராமாயணம் போன்ற கதைகளில் சுயம்வரக் காட்சிகள் இடம் பெற்றிருக்கின்றன. தமயந்தி சுயம்வர மண்டபத்தில் காத்திருந்த தேவர்களையெல்லாம் விட்டு வி;ட்டு தன் மதி கூர்மையினால் ஆராய்ந்த அவர்களுள் அவ்விடத்தே இருந்த உண்மையான நளன் யார் எனக் கண்டறிந்துவிட்டாள். “நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள் அறிந்தாள் நளன்

தன்னை ஆங்கு” (160)

என அறியப்படுகின்றது. பழங்கால கதைகளில் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்ததைப் பதிவு செய்ததோடு அக்கால பெண்கள் அறிவு கூர்மையுடன் செயல்பட்டத் திறத்தையும் எடுத்துரைத்து பெண்ணியம் போற்றப்பட்டுள்ளது. இந்த சுயம்வர நிகழ்;ச்சியினைத் தன் வரிப்பு எனவும் அழைப்பர். அதாவது தனக்கான கணவனை ஒரு பெண் தானே வரித்துக் கொள்ளல் எனப் பொருள்படும்.

புகழேந்தியார் நள தமயந்தி சுயம்வர நிகழ்ச்சியினைக் கூறும்நிலையில் இந்திய நாட்டில்

இருக்கும் எண்டிசை வேந்தர் பலரும் வந்து கலந்து கொண்ட செய்தியினையும் அவ்வேந்தர்களின் வரலாற்றைச் சிறப்பினைக் கவிநயத்துடன் கூறுகின்றார்.

புகழேந்தியார்:

கவிராட்சகரான ஒட்டக்கூத்தரும், கவியரசரான கம்பர் பெருமகனாரும் தமிழின் சீர்மையைப் பெருக்கி வந்த காலம். அப்பொற்காலத்தே எழுந்த நளவெண்பாவும் ஒப்பற்ற தமிழ்க் கருவூலமாகவே மிளிர்கின்றது. இக்கருவூலத்தைப் படைத்து வந்த புகழேந்தியார் தொண்டை நாட்டில் அமைந்துள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தார் என்பார். இதனை மாலார் களத்தைப் புகழேந்தியும் தொண்டை மண்டலமே ஐயன் களத்தைப் புகழேந்தியாண்டான் காரர்களத்தைப் புகழேந்தி என வருகின்ற தொண்டை மண்டல சதகச் செய்யுளடிகள் இதற்குச் சான்றாக அமைகின்றது. இப்பெருமகனார் பிறந்த விளைந்த களத்தூர் தற்போது செங்கற்பட்டுக்கு அருகாக அமைந்துள்ளது. இவர் துளுவ வேளாள மரபினர் எனவும் கூறுவர்.

“சடைச் செந்நெல் பொன் விளைக்கும் தன்னாடு” போன்ற தொடர்களால் மருதநிலப் பண்புகளை ஆய்ந்து கூறுவதால் இவர் வேளாண் மரபினர் என்பதை வலியுறுத்தும் இவர் தம் பாடல் மூலம் சைவ வைணவத்திலும் கொண்ட ஈடுபாடு அறியப்படுகின்றது. வேந்தர்கள் குணமும் ஆட்சியும் அவர்கள் ஆளும் நாட்டிலும் எதிரொலிக்கும் பாங்கினை ஆசிரியர் வேந்தர்களை அறிமுகப்படுத்திய போது பயன்படுத்தியுள்ளார்.

சோழவேந்தன்:

முடிவுடை வேந்தர்களில் ஒருவரான சோழ வேந்தனின் புகழுடன் இணைந்த ஒன்றாக இருப்பது அவனுடைய காவிரி ஆறு அதனைப் “பொன்னியமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்” (141)

பொன்னிநதியின் நீரானது அமுதம் போன்று இருப்பதாகவும் அத்தகைய நீர்வளமுடைய சோழ வேந்தன் அறிமுகப்படுத்தப்படுகின்றான். ஒரு வேந்தனின் நல்லாட்சியினை அவனது நாட்டில் நிலமும் நீர்வளத்தைக் கொண்டு அறியலாம் என்பது நம் முன்னோர் வாக்கு.

பாண்டிய வேந்தன்:

தமிழகச் சமூகத்தில் வேந்தனை இறையோடு வைத்து ஒப்பிட்ட சிறப்படைவர் தமிழர்கள். அவ்வகையில்

“போர்வாய் வடிவேலாற் போழப் படாதோரும்” (142)

என்னும் வரிகளில் மேருமலையின் வெற்றி கொண்ட வேந்தனாகவும் உலகினையே ஆட்சி செய்யும் சிவபெருமானுடைய மகனான முருகப் பெருமானுடன் பாண்டிய வேந்தனை ஒப்பிட்டுச் சிறப்பு செய்துள்ளார்.

சேர வேந்தன்:

சங்க இலக்கியத்தில் தங்களுக்கான ஒரு தனி நூலினைப் பெற்று மணமகனையே அரணாக அமைத்து வளம் சேர்க்கும் சேரவேந்தர்களின் சிறப்பினைக் கூறும் முகத்தான். “மாதேயிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்” (143)

எனச் சேரவேந்தர் தங்கள் வெற்றியின் அடையாளத்தினை வீரத்தின் தினைவினைத் தங்கள் ஒப்பற்ற தன் கொடியின் மீதிலே வில்லை உயர்த்திழ அமைத்து வெளிப்படுத்தியுள்ளார்.

யதுகுல வேந்தன்:

கார்த்தவீரியார்ச்சுனன் என்பவன் யதுகுலத்தான். அவன் நருமதைச் சங்கமத்தருகே இராவணனை மீட்க அரக்கரைக் கொன்று கடலிலே ஆயுதங்களைக் கழுவினான்.

“நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர் செற்றானும் கண்டாயிச் சேய்” (147)

மற்றொருமுறை நாரதருக்கும் விசுவாவசுவிற்கும் சங்கீத சர்ச்சை நடந்த சங்கத்தின் தலைவனாயிருந்தான் அவன் பெருமைகள் யதுகுலத்திற்குச் சுட்டப்பெற்றன. பாண்டவர் தேவாம்சமாகப் பிறந்தவன் அவர்கட்குத் தூது சென்றவன் கண்ணன். அவனும் யதுகுலத்தான். பாரதப் போரை முடித்தவனும் இவனே என யதுகுல வேந்தர்களின் மாண்பைப் புகழேந்தியார் எடுத்துரைக்கின்றார்.

குருநாட வேந்தன்:

செங்கழுநீர் அரும்பைப் பாம்பின் தலையென்று அஞ்சிக் கதறுகின்ற குஞ்சுகளுக்குத் தாய் நாரை அதை நீக்க இரவெல்லாம் தாலாட்டுகின்ற வளமுள்ள மருதநிலம் சூழ்ந்த குருநாடு

“பிள்ளைக் குருகிரங்கப் போதைப்புள் தாலாட்டும் வன்னைக் குருநாடார் மன்” (145)

தன் மக்களுக்குத் தேவையான பொருள் வளங்களைத் தாமே நிறைவேற்றிக் கொள்வதே நாடு என வள்ளுவன் சுட்டும் நாட்டைப்பெற்ற பெரும் புகழுடையவன் குருநாடன்.

மந்திரத்தார், மச்சத்தார் வேந்தன்:

வயல்கள் சூழ்ந்திருக்கவும் தேன் பொருந்தியிருக்கும் தாரினை அணிந்த ஏறுபோன்றோன் என மந்திர தேசத்து வேந்தனையும் (146) ஆலையினிடத்தே இருந்து வரும் கருப்பஞ்சாறானது நீராகப் பாயும் படியான செழுமையான நாட்டுக்குத் தலைவனான மச்ச நாட்டு வேந்தனின் (147) பண்ணை நாட்டு பண்பாகக் கூறுகின்றார்.

அவந்தி வேந்தன்:

பெரிய ஆண் யானையை ஒத்தவனாவான். பண்பாடும்கால் உயர்த்திப் பாடுதலும், தாழ்த்திப் பாடுதலும, சமனிலையிற் பாடுதலும் இசை பாடுவோரின் இயல்பு. இதனை ஆரோகணம் அவரோகணத்துக்குச் சமம் என வடமொழியாளர் கூறுவர். ஐயறிவு கொண்ட எருமைகளும் அந்நாட்டின் இசைக்கு மயங்குமென்றதனால் அந்நாட்டு மக்கள் கல்வி கேள்விகளில் மிக்கார் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார். இதன்வழி அவந்தி வேந்தனை சிறப்புச் செய்துள்ளார்.

பாஞ்சாலனும் , கோசலனும்:

லீமன் குல விளக்காகப் பாஞ்சால வேந்தன் பார்க்கப்படுகின்றான். பாஞ்சால நாடு வளம் மிக்கதாகவும் , பாஞ்சால வேந்தனைக் காளைக்கு நிகராகவும் உவமிக்கின்றார் புகழேந்தி (149) கருக்கொண்டிர்க்கும் ஆமையினது முதுகு முட்டிலே வளைவான” தம் அரிவாளினைத் தீட்டுகின்ற சிறப்பு மிகுந்த கோசல நாட்டு வேந்தன் (150) என நாட்டின் வளத்தை அந்நாட்டு வேந்தனுக்குச் சமம் என வெளிப்படுத்துகின்றார்.

மகத வேந்தன்:

எண்டிசையில் போர் வேந்தர் கண்டறியாப் பொன்னாவம் பின்னுடைய” (151)

என்னும் வரிகளில் எட்டுத் திசைகளிலுள்ள போரில் வல்லுநரான வேந்தர்களும் பார்த்தறியாத பொன்னால் செய்த அம்பறாத் தரணியைத் தன் முதுகில் பூண்டு தேரில் ஊர்ந்துச் செல்லுகின்ற வேந்தன் என மகத நாட்டு வேந்தனின் வீரத்தினையும் கூறி புறுமுதுகு காட்டிச் செல்லாத மாண்பைப் பதிவு செய்கிறார் புகழேந்தியார்.

அங்கனும் கலிங்கனும்:

கூன் சங்கின் இளங்குஞ்சுகள் நடந்து போகும் போது பவளக்கொடி தடுக்கித் தேன்கழியில் விழும் போது கடல் அந்தோ என்று அலறித் தன் அலைக் கைகளினால் தழுவி எடுத்துவிடுகின்ற நெய்தல் நிலம் சார்ந்த அங்கநாட்டை ஆளும் வேந்தன் என நாட்டு மக்களுக்கு ஒரு தாயாக நடந்துக்கொள்ள வேண்டும் என்பதை இவ்வுவமை மூலம் ஆசிரியர் வலியுறுத்துகிறார்

"வண்டிரியச் செல்லும் மணிநீர்க் கலிங்காகோன்"

மணிநீர் என்பது வற்றாத நீர்வளமுள்ள கலிங்க நாட்டின் வேந்தன் என நீர்வளத்துடன் வேந்தனைச் சிறப்பிக்கின்றார்.

"மணி நீர் என்றும் சொல்வினை "மணி நீரும் மண்ணும் மலையும்"

என வள்ளுவரும் மாசறத் தெளிந்த மணிநீர் இலஞ்சி என்ற மணிமேகலையின் ஆசிரியரும் கையாண்டு நீர்வளமே உலகின் உயிர்வளம் என்றனர்.

கேகப வேந்தன்:

இந்திய நாட்டின் புண்ணிய (சீவ) நதியாக இருக்கும் கங்கை நதியின் வளத்தினைக் கேகய நாட்டு வேந்தனுக்குக் கூறுகின்றார். "கங்கையினைச் சேல்குளிக்கும் கேகயர்கோன் தெவ்வாடற் கைவரைவேல்" (154)

காந்தாரனும, சிந்து வேந்தனும்:

காந்தார நாட்டு வேந்தனின் சிறப்பைக் கூற வந்த ஆசிரியர் நமது அரிய கலைகளுள் ஒன்றான மறைந்து வரும் கலைகளுள் ஒன்றாகக் கருதப்படும் கழைக்கூத்தினைப் பதிவு செய்துள்ளார். "கழைக்கோ தையரேய்க்கும் காந்தா நாடன்" (155) இருமருங்கும் மூங்கிலை நாட்டி அவைகளில் கயிற்றைக் கட்டி அதன் மீது நடந்து கூத்தாடுகின்ற கழைக்கூத்தாடிப் பெண் போல என காந்தார நாட்டு அன்னப் பறவையின் செயலைக் கூறி நாட்டின் நீர் வளத்தைச் சுட்டிக்காட்டினார். குளிர்ச்;சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த பெருமை பொருந்திய சிந்து நாட்டுக்கு வேந்தன் (156) என சிந்துவின் வளத்தைக் கூறுகிறார்.

தொகுப்புரை:

வாழ்வு தாழ்வு என்பவை வாழ்க்கையின் நியதியே என்பதை வகுத்துக்கூறி தாழ்வுற்ற போதும் கலங்காது எதிர்நோக்கிச் செல்லுகின்ற மனநிலை வேண்டும் என்னும் நோக்கில் எழுதப்பட்டதே நளவெண்பா. சமூகத்தில் பெண்களுக்கிருந்த உரிமையினைக் சுயம்வரக் காட்சி மூலம் பதிவு செய்துள்ளார். பெண்கள் அறிவில் சிறந்து இருந்தனர் என்பதைத் தமயந்தியின் வழியாகவும் தோழியின் வழியாகவும் புகழேந்தியார் வெளிப்படுத்தியுள்ளார். வளமான நாடே வளமான வேந்தனுக்கு சான்றாகக் கூறுகிறார் ஆசிரியர். சிறந்த ஆட்சிக்கு உதாரணம் அந்நாட்டின் நீர்வளம் என்பதனையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். மக்கள் தொடர்பு சாதனங்கள் அதிகரித்துள்ள

இக்காலத்தில் பிறநாட்டு சிறப்பினை எளிதில் அறியலாம். ஆனால் தகவல் தொழில்நுட்பம் இல்லாத அக்காலத்தில் புகழேந்தியார் பிறநாட்டு வேந்தர், நாட்டு வளம் ஆகியன அறிந்திருப்பது அவர்தம் கவியில் ஒரு மைல்கல் என்றே கூறலாம்.

துணைநூற்பட்டியல்

நளவெண்பா
அ.பா .பாலையா
உரை ஆசிரியர்
சாரதா பதிப்பகம்
சுயம்வரம்
கேசவமணி
புக்ஸ் ஃபார் எவர்